
இன்றே விஜயம் செய்யுங்கள்
மா. சேனாதிராஜா
பல் கட்டுபவர் | கண்பரிசோதகர்
9, மெயின் வீதி - யாழ்ப்பாணம்.



Registered as a News paper in Ceylon  விலை சதம் 10.

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி  National Tamil Daily
மலர் 10  [13-4-68]  இதழ் 63
யாழ்ப்பாணம் கிலக சித்திரை 1 முகரம் 14 சனிக்கிழமை



நண்பர்கட்கும் அன்பர்கட்கும்
ஆதரவாளர்கட்கும்
எம் இதயம் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்

ஏ. கே. எஸ்.
அன் ஸன்ஸ்
நகைமாளிகை யாழ்ப்பாணம்.
ஈழத்திருநாட்டின் ஈடு இணையற்ற ஸ்தாபனம்! அரை நூற்றாண்டின் அரிய சேவையால் உங்கள் பேராதரவைத் தேடிக்கொண்ட
வைர நகை வியாபாரிகள்



ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்

கே. என். எம்.
மீறன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன் : 585



இலங்கையில் உற்பத்தி
செய்யப்பெற்ற
றவுண்ட்
இரும்புக் கம்பிகள்
சகல தினிசுகளும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விஜயா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
146, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 357


## புத்தாண்டே!

— இ. நாகராஜன் —

நேர்மைய வாழ்வில் பூத்த
நேர்மைகள் நிலைக்க இன்று
போற்றிய புதுமை ஓங்க
புவனியில் இன்பம் பூக்க
மாற்றமும் மயபோ டொட்டி
மலர்வுற மனித நெஞ்சம்
ஏற்றிட எல்லோர் வாழ்வும்
இதம்பெற வருக நன்றே!

★

உண்மையே உயிராம் என்னும்
ஓர்நெறி தழைக்க யாண்டும்
வண்மையே வாழ்வசம் என்னும்
வழக்கமும் ஓங்க மேன்மை
திண்மையே பெற்று நிற்கச்
சீலமும் பண்பும் சேர்ந்த
ஒண்மையே ஓங்க நீயும்
உதித்திட வேண்டும் இங்கே!

★

குயிலினம் கொம்பிற் கூவ
கொடியினம் பூக்கள் நல்க
மயிலினம் அகவி ஆட
வண்டினம் மகிழ்ந்து பாட
பயிரினம் பசுமை காட்ட
பாரெலாம் உண்டி கொள்வ
செயிரிலா இன்பம் தோன்றும்
சீருடன் மலர்க நீயும்,

★

எம்பிடும் கரங்கள் யாவும்
குணம்பெற கடவுள் தன்னை
நம்பிடும் உளங்கள் நன்மை
நண்ணிட நாட்டில் நாளும்
வெம்பிணி சாரா மேன்மை
விளங்கிட விஞ்ஞா னத்தின்
தெம்பினை விடுத்துச் சீலம்
சீருற மலர்க நீயே!

## 'சமய நூல்களை பாதுகாருங்கள்'

உடுவில், வெள்ளி

''ஒரு நாடு சிறப்புற்று விழங்க வேண்டுமானால் அந்த நாட்டில் சமய வளர்ச்சி ஏற்பட வேண்டும். சமய வளர்ச்சியை இன்றைய இளைஞர்கள் பலர் உதாசீனம் செய்வது வருத்தத்துக்குரியதாகும். சமய நூல்கள் பல நமது நாட்டில் அழிவுற்றுக் கொண்டு வருகின்றன. அவற்றை படித்துப் பயனுள்ள தத்துவங்களையும் முன்னேறும் வழிகளையும் கடைப்பிடித்தல் அவசியம்.''

கொக்குவிலில் உள்ள திருபாகர சிவசுப்புரமணிய சுவாமி கோவிலில் (புதுக் கோவில்) உட்பிரகார அறையில் ஓர் சைவ சமய வளர்ச்சி நூல் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசிய கொக்குவில் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. வே. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினர்.

## மலர்க புதுவருடம்

அமைதியும் ஐக்கியமும் செல்வமும் செழிப்பும் சீரும் சிறக்க புதுவருடம் மலரட்டும். நோய் தீர்ந்து மனிதகுலம் சுகம்காண அல்லல் நீங்கி மனிதவர்க்கம் ஆறுதலடைய புதிய வருடம் ஆதரவு கொடுக்கட்டும்.

வெம்மை, கொடுமை வேதனை தீர்ந்து மனுக்குலம் செம்மைநெறிகொண்டு ஒளிவழி காண புத்தாண்டு புதுவழிகாட்டுமாக.

★

## எமது புதுவருட வாழ்த்துக்கள்

வாசக நேயர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்.


உங்கள் தேவைகளை
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
கீழ்க்கண்ட தங்கள் கிளைகள் மூலம் திருப்திசெய்வதில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

யாழ். வாடிக்கையாளருக்கு-
O 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
O 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
O 15, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
O 17, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
O 38, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
O 287/287 ஏ, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

வெளியூர் வாடிக்கையாளருக்கு-
O 334, கண்டி றேட், சாவகச்சேரி.
O காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்
O 181/183, கண்டி றேட், கிளிநொச்சி.
O பிரதான வீதி, பருத்தித்துறை



புதுவருட வாழ்த்துக்கள்!



எங்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.
சென்னையில் நடைபெற்ற உலக கைத்தொழில் பொருட்காட்சியில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிறந்த சோப் என நன் மதிப்புப்பெற்ற சோப்
மில்க்வைற் சோப் ஒன்றே
சிறந்த சலவைக்கும், பிரகாசமான வெண்மைக்கும் மில்க்வைற் பார் சோப் உபயோகியுங்கள்.
நாம் புதிதாக தயாரிக்கும் புதுசு சோப்பை எதிர்பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான
எல்லாவிதமான ஜவுளி வகைகளையும்
பெற்று
சென்ற வருடங்களைப்போல் இந்த வருடமும்
ஆதரவு தருக!

# கணேசானந்தாஸ்

(முட்டாசுக்கடைச் சந்தி)
208, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Robert Stack, Nancy Kwan,
Elke Sommer
in
**THE CORRUPTONES**

**REGAL** JAFFNA
Daily at
10-30 & 4-45 p.m only
**THE CHASE**

தினசரி 6-30, 9-30க்கும்
மாமா விஜயம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை] | விஜிதா [மஸ்கேலியா]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)

## மயிலிட்டிக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால் கட்டுவன் மேற்கு (18-ம் வட்டாரம்) முனியப்பர் கோவில் ரோட் திருத்த வேலைக்கான கேள்விகள் 25-4-68ம் திகதி காலை 9-30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 25/-ம் கேள்விப்பத்திரச் செலவு ரூபா 5-ம் கட்டி கிராமசபைக் கந்தோரில் 23-4-68ம் திகதி பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலையைப் பற்றிய விபரங்கள் கிராமசபைக் கந்தோரில் வேலை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

(ஒப்பம்) சி. அருணாசலம்,
தலைவர்,
கிராமசபை மயிலிட்டி.

கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை.
9-4-68. 617

## விற்பனைக்கு

காணி!

ஊரெழுவில் பிள்ளையார் கோவிலுக்கு பிற்பக்கம் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களை போயா தினங்களில் அறியலாம்.
ஆ. இரத்தினசபாபதி,
65/1 அரசடி வீதி, கூசவன்குளம், யாழ்ப்பாணம்.
1417

## தேவை

காணி!

வவனியா அல்லது அதைச் சூழ உள்ள இடங்களிலிருந்து பத்திலிருந்து இருபத்தைந்து ஏக்கர் வரை விஸ்திரணமுள்ள தண்ணீர் வசதியுடன் கூடிய உணவுச் செய்கைக்கான காணி தேவை. தொடர்பு கொள்க. செ. சிவசாமி, 79 1/1, அல்விஸ்பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு 13. 1428

## தேவை

காஷியர், சகிற்பனையாளர். ரூபா 1000/- காசுப் பிணை கட்டக்கூடியவர்கள். அசோக்கா இன்ஜினியறிங் கோப்பரேஷன், உயிலங்குளம். 1509

யாழ்ப்பாண மாநகரசபை

## ஏல விற்பனையாளர்கள் தரகர்கள் பற்றிய நிரல் 31-3-68 வரை

| [அ] ஏல விற்பனையாளர்-தரகர் பெயர் | முகவரி |
|---|---|
| 1. செல்லையா பாண்டித்துரை | மல்லாகம். |
| 2. எஸ். இரத்தினசபாபதி | 24, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். |
| 3. எஸ். ஏ. கி. வடிவேலு | 199/4. கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |

| [ஆ] ஏல விற்பனையாளர் பெயர் | முகவரி |
|---|---|
| 1. ஆர். கனகரத்தினம் | 35, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| 2. சி. செல்லையா | 37, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| 3. சி. கே. பொன்னுத்துரை, ஜே. பி. | 28/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம். |
| 4. வி. ஏரம்பமூர்த்தி | "மூர்த்தி வாசம்", காரைநகர். |
| 5. வி.எஸ். குட்டிப்பிள்ளை | 643, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| 6. வி. இரகுநாதன் | 8, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். |

கட்சன் செல்வராசா
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
8-4-68. 616

# 'மேலும் ஒரு விவசாய படை நிறுவுக'

## கிளிநொச்சி எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

'தமிழ் இளைஞர்கள் மேலும் பலர் விவசாயப் படை முகாமில் சேர்வதற்கு ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆகையினால் கரியாலை-நாகபடுவான் விவசாயப்படை முகாமை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குக' என காணி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தையன் கட்டு விவசாயப்படை முகாம், விசுவமடு விவசாயப்படை முகாம் ஆகியவற்றுக்கு தேவையானவர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டதைத் தொடர்ந்தே பண்டிதர் இரத்தினம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளாரெனத் தெரிகிறது.

மேற் குறிப்பிட்ட இரு முகாம்களுக்கு இனி விவசாயப் படைக்கு ஆள் எடுக்கமாட்டார்களெனத் தெரிகிறது. கரியாலை—நாகபடுவான் முகாம் அமைக்கப்பட்ட பிறகே தமிழ் இளைஞர்கள் விவசாயப்படையில் சேர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுமெனவும் தெரிகிறது.

## கூப்பன் யாருடையது?


யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. செ. சுந்தரலிங்கம் என்பவரால் கூப்பன் ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

எல்லோரும் விரும்புவது ! எங்கும் கிடைப்பது !!

# பீ. வீ. எம். ஒரென்ஜ் பீடிகளே !!!

பீடி உலகில் இன்று
தனக்கென ஒரு தனி இடத்தை
பெற்றுக்கொண்டு மிக வேகமாக
மக்கள் மனதில் தனது
பெயரை நிலைநாட்டி வருபவை
பீ. வீ. எம்.
ஒரென்ஜ் பீடிகளே.
அவ்வு கடந்த காரமோ
அதிக மென்மையோ
இல்லாமல் புகைத்து
பூரண திருப்தி காண
பொருத்தமான காரம்
புகை பிடிப்போரில் பெரும்பாலோர்
விரும்பும்
கணக்கான காரம்.






அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!

ஆகையினால்தான்
பீடி பிரியர்கள் இன்று ஒரென்ஜ் பீடிகளையே கேட்டு வாங்குவதும், தமது ஞாபகத்தில் வைத்திருப்பதும்
ஒரென்ஜ் பீடிகளே!

தயாரிப்பாளர்கள் P. V. M. ஒரென்ஜ் பீடி கம்பெனி
நவாலி ரோட், ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவம் தழைத்தோங்க தீண்டாமை ஒழியவேண்டும்"

## 'ஆலயபிரவேசத்துக்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை'

### இந்து மாமன்ற கூட்டத்தில் பிரமுகர்கள் கருத்து

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், சனி

**'சரித்திர ரீதியிலும் சமுதாய ரீதியிலும் ஆராய்ந்து பார்த்தால், வடபகுதியில் 25 வருடங்களுக்கு முன்னரே தீண்டாமைப் பிரச்னை தீர்ந்திருக்கவேண்டும். இவ்வளவு காலமும் தீராமலிருப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள சைவர்களைத்தான் குறைசொல்லவேண்டும். இன்னும் ஆயிரமாயிரம் வருடங்களுக்கு சைவம் தழைத்தோங்க வேண்டுமானால், தீண்டாமை முற்றாக ஒழியவேண்டும்.'**

*வண்ணை வைத்தீஸ்வர வித்தியால மண்டபத்தில் நேற்று நடந்த ஆலயப்பிரவேச ஆலோசனைக் கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.*

அகில இலங்கை இந்துமாமன்ற யாழ். கிளைச்சாரபில் நடந்த இக் கூட்டத்திற்கு, இந்த மாமன்ற உப தலைவர் திரு. ரி. முத்துசாமிப்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. முருகேசம்பிள்ளை மேலும் கூறியதாவது:—

சைவத்தின் மறுமலர்ச்சிக்கு தீண்டாமை ஒழிப்பு ஒருதிறவுகோலாகும். சைவத்தை செழிக்க வைக்க இது ஒரு நல்ல தருணம்.

இரகசியமாக ஆலயப் பிரவேசம் நடத்தக் கூடாது. பகிரங்கமாக, பஜனைக்கோஷ்டியாக, இரு நூறு முந்நூறு பேர் ஊர்வலமாகச் சென்று ஆலயத்துள் செல்ல வேண்டும்.

தீண்டாமைப் பிரச்னையால், சைவ உலகத்தை நாசமாக்கவும் முடியும், உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவும் முடியும். இதில் சைவர்களாகிய நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? சைவத்தை மேல்நிலையடையச் செய்ய வேண்டுமானால், தீண்டாமைப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

முதலியார் எஸ். சின்னத்தம்பி கூறியதாவது:— இந்துமாமன்றம், தீண்டாமை ஒழிப்புப் பிரச்னையில் உடனடியாக தீவிரமாக இறங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தீய சக்திகளின் சிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

#### தலையிடுவதை குறைக்கவேண்டும்

காந்திசேவா சங்க காரியதரிசி திரு. எஸ். ஸ்ரீநிவாசன் கூறியதாவது:-

தீண்டாமை ஒழிப்பு பிரச்னையில் காக்கியுடையணிந்த பொலிசாரும் வெள்ளைச் சட்டையணிந்த அரசாங்க உத்தியோகஸ்தரும் தலையிடுவதை கொஞ்சம் குறைத்துக்கொள்ளவேண்டும். இவர்கள் தலையிடுவதால் மக்களிடையே தவறான அபிப்பிராயங்கள் நிலவுகிறது. அரசாங்கத்திடம் நல்ல பிள்ளை பெயர் கேட்பதற்கும் பதவி உயர்வுக்குமாகவே இவர்கள் தலையிடுவதாகவும், மனதூய்மையுடன் கலந்துகொள்ளவில்லையென்றும் மக்கள் நினைக்கிறார்கள்.

திருமுறைகழக காரியதரிசி பண்டிதர் எஸ். சுப்பிரமணியம் கூறியதாவது:- ஆலயப்பிரவேசத்திற்கு கூட்டம் அவசியமில்லை. சமாதான முறையில் செய்ய வேண்டும். கிராமங்களிலுள்ள சிக்கல்களை ஆராய்ந்து செயலாற்றவேண்டும்.

(9ம் பக்கம் பார்க்க)

---

யாழ். மாவட்ட விவசாயிகள் சாதனை

## நெல்விளைச்சல் இம்முறை இருமடங்காக அதிகரிப்பு

### உப உணவு பொருட்களிலும் விளைச்சல் இரட்டிப்பு

— நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாண மாவட்டத்தில் சென்ற வருடம் அறுவடைசெய்த நெல் விளைச்சலிலும் பார்க்க இந்த வருடம் அறுவடை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. சென்ற வருடம் சுமார் 2 லட்சம் புசல் விளைவிக்கப்பட்ட நெல் இந்தவருடம் சுமார் 4லட்சம் புசலாக அதிகரித்துள்ளது.**

ஏனைய உப உணவுப் பொருட்களாகிய உருளைக் கிழங்கு, மிளகாய், தக்காளிப்பழம், வெங்காயம் ஆகியவற்றிலும் சென்றவருடத்திலும் பார்க்க யாழ். மாவட்டம் இவ்வருடம் தனது அறுவடையை இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளதென யாழ். மாவட்ட விவசாய இலாகா தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் உப உணவுப் பொருள் உற்பத்தியில்யாழ். மாவட்ட விவசாயிகள் முன்னணியில் நிற்கிறார்களென்றும் தக்காளிப்பழம், மிளகாய், கத்தரிக்காய், வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய உப உணவுப் பொருட்கள் இப்பொழுது வடக்கில் இருந்து தெற்கிற்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வருடம் யாழ்ப்பாணமாவட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் நெற்பயிர் செய்கைக்குரிய சுமார் 2,930 தொன் உரத்தை விற்பனைசெய்ததாகவும், இந்த வருடம் சுமார் 4,279 தொன் உரம் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப் பட்டதாகவும்தெரிக்கப்பட்டது. [வி.நி]

---

அமெரிக்காவில்

## புதிய சிவில் உரிமை மசோதா

வாஷிங்டன், ஏப்ரல் 12

புதிய சிவில் உரிமைகள் மசோதாவொன்று அமெரிக்காவில் சட்டமாக்கப்பட்டுள்ளது.

வீடுகள் கொடுப்பதில், நீக்கிரோக்களுக்கெதிரான பாகுபாட்டை ஒழிப்பதே இம்மசோதாவின் நோக்கமாகும்.

இம்மாசோதாவில், அமெரிக்க ஜனாதிபதி நேற்றுத் தமது கையொப்பத்தை வைத்தார். கையொப்பம் வைக்கும் நிகழ்ச்சியில், அரசியற் பிரமுகர்கள்பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதிஜோன்சன், "சிவில் உரிமைகள் போராட்டத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் கொலை, அமெரிக்க நாட்டையே ஆத்திரமடையச் செய்துள்ளதாக" த் தெரிவித்தார்.

---

மெக்ஸிக்கோ

## விமான விபத்தில் 18 பேர் மரணம்

மெக்ஸிக்கோ, ஏப்ரல் 12

மெக்ஸிக்கோவில், விமானமொன்று மலையில் மோதுண்டு நொறுங்கியதால் அதிலிருந்த 18 பேரும் உயிரிழந்தனர்.

புயலில் அகப்பட்டுக் கொண்ட விமானம், திசை தப்பி மலையொன்றில் மோதியது.

இறந்தவர்களில், சில உயர்தர மெக்ஸிக்கோ அதிகாரிகளும் இருந்தனர்.

---

### புத்தாண்டு விழாக்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பாபுஜி கலாமன்றத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் இன்று நடைபெறுகிறது. 25 மைல் ஆண்கள் சைக்கிளோட்டம் 5 மைல் பெண்கள் சைக்கிளோட்டம் ஆகியன இன்று காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளிலல் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சியில் கட்டுரைப்போட்டி, விநோத உடைப்போட்டி ஆகியன இடம்பெறும். இரவு நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரிண்டன் திரு. ரி. சண்முகநாதன் தலைமை வகிப்பார்.

ஃ ஃ ஃ

அளவெட்டி, சனி

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியினர் புதுவருடப் பிறப்பன்று வலி-வடக்கு விளையாட்டுக்கழக சமாசத்தின் (காங்கேசன் துறை) ஆதரவில் இன்று விளையாட்டு விழாவை நடத்த ஒழுங்கு செய்துள்ளனர்.

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். டி. மூர்த்தி தலைமையுல் இவ் விழா நடைபெறும்.

---

### சுங்கான் பற்றியவர் தீப்பிடித்து மாண்டார்

யாழ்ப்பாணம், சனி

சுங்கானுக்கு நெருப்புப் பற்றுகையில் உடலில் தீப்பிடித்த வயோதிபர் ஒருவர் எரிகாயங்களால் மரணமானார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமான நயினா முகம்மது (70 வயது) என்பவரின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார். மரணமானவர் சம்பவம் நடந்தபோது சுங்கானுக்கு நெருப்புப் பற்ற வைக்க 'லாம்பு' விளக்கைச் சரித்தபோது, மண்ணெண்ணெய் முழும், உடல் எல்லாம் ஊற்றுண்டதால் அவரது உடலில் தீப்பற்றி எரிகாயங்களுக்கு உள்ளானதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

பிரேத பரிசோதனையின் பின்னர் விபத்தினால் ஏற்பட்ட மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். [கா. நி.]

---

### செம்பியன்பற்று கொலை வழக்கு சுப்ரீம் கோட்டுக்கு

சாவகச்சேரி, சனி

செம்பியன் பற்றுக்கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு.கே. சின்னராசா விசாரணை முடிவில் வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப் படுத்தி இவ் வழக்கின் எதிரியையும் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பளையை அடுத்துள்ள செம்பியன் பற்று என்ற இடத்தில் வசித்து வரும் அவ் வட்டாரக்கம விதானையாக இருந்தவருமான கந்தையா பசுபதி என்பவரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக அதே ஊர் வாசியான கந்தையா பாலசுந்தரம் என்ற இளைஞர் மீது பளைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பையொட்டி [13-4-68] இன்று 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் [14-4-68] ஞாயிற்றுக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது.

## மணிவாக்கு

நமக்குக் கடவுளிடம் உண்மையில் பக்தியும் நம்பிக்கையுமிருந்தால், தம் குடும்பத்தில் ஒற்றுமை வளரும். தீங்கு வராது. அவர் நன்றே உடையவர், தீ[ஃ]ற்றவர். அவரை நமக்குள் தேடி உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால் அவரை அடையலாம். பிறகு எல்லாம் இன்பமே.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 47 Jaffna
Telephone: 89.


யாழ்ப்பாணம் இலங்கை
வருஷம் சித்திரை
மாதம் 1ம் திகதி [13-4-68]

## தேசிய தினவிழா

தமிழருக்கும், சிங்களவருக்கும் இன்று பிறக்கும் புத்தாண்டை இலங்கையின் தேசிய ஒற்றுமை விழாவாகப் பல இடங்களில் கொண்டாடுகின்றார்கள். இந்நாட்டில் வசிக்கும் இவ்விரு பெரிய சமூகங்களுக்கும் பொதுவான இவ்விழா, இச்சமூகங்களுக்கிடையிலேயும் ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்தப் பெரிதும் உதவக்கூடும்.

சில வருடங்களுக்கு முன்பாக இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இப்போது இன, மொழி வெறிகள் சிறிது அடங்கி நிலைமை மேம்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். உண்மையில் பொதுமக்களிடையிலே நல்லுறவுகள் இயற்கையாகவே உண்டு. ஆனால் அரசியல் முதலிய காரணங்களால், சில சுயநலமிகள் வேற்றுமை வெறிகளைக் கிளப்பிவிட்டு தாங்கள் இலாபமடையப் பார்க்கிறார்கள். இச்சுயநலமிகளுக்கு இடம் கொடுக்காமல் பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவது அவசியம்.

முதலில் நம்மிடையே ஒற்றுமையும் அன்பும் இருந்தாலே பிறர் நம்மை மதிப்பர். இன்று தமிழரிடையே அவ்வித அன்புறவும் ஒற்றுமையும் உள்ளதா என்றால், இல்லை என்றுதான் வெட்கத்துடன் நாம் கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம். நமக்குள் அன்புறவும், ஒற்றுமையும் இல்லாவிட்டால் எப்படிப் பிறர் எம்மை மதிப்பர்? தேசிய ஒற்றுமையும், நல்லுறவும் ஏற்பட முடியுமா? தமிழரின் குறைகளுக்குச் சில சிங்கள அரசியல்வாதிகளைக் குறை கூறுவது சில வட்டாரங்களிடையே வழக்கமாகிவிட்டது. ஆனால் இதனால் எவ்வித நன்மையும் ஏற்பட முடியாது. பிறரைத் திருத்த முயலுவதைவிட நம்மை நாமே திருத்திக்கொள்ளுவதுதான் அதிக சுலபம். பலனும் உண்டு.

இன்று தமிழ்க் குடும்பத்திலே எல்லாரும் சம உரிமையுடன் வாழமுடிகின்றதா? சமூகக் குறைகள் ஒருபுறமிருக்க, பொருளாதார அநீதிகளும், சுரண்டல்களும் எவ்வளவு உள்ளனவென்பதை சற்றே கவனிப்பவர்களுக்கு நன்கு தெரியும். வேலையில்லாக் கஷ்டங்கள் நம் வாலிப சமூகத்தைப் பயமுறுத்துகின்றன. வேலையில்லாவிடில் உணவில்லை. வாழ்வில்லை. எதிர்காலம் பற்றிப் பலரும் அஞ்சுகின்றனர். இப்பிரச்னையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகச் சிலர் கூறலாம். ஆனால் நம் சுய முயற்சியின்றி அரசாங்கத்தை நம்பி இருப்பதில் பயனில்லை.

சுயநலத்தைக்குறைத்து, அன்பை வளர்த்து, நம்மில் ஒவ்வொருவரும், பிறருக்குக்கூடுமான உதவியைச் செய்தால் ஒன்றுமில்லாவிடில், இன்சொல்லாவது கூறினால், நாம் இன்பமடையவும் சமூகம் அன்பால் ஒற்றுமைப்படவும் முடிவதாக இருக்கும். இன்று பிறக்கும் புத்தாண்டிலே தமிழர் ஒவ்வொருவரும் சுயநலத்தைக்குறைத்து அன்பை வளர்ப்பதென்று உறுதி கொண்டால், அவர்கள் இன்புறுவதுடன், சிங்களவரது மதிப்பைப்பெற்று அவர்களது நல்லுறவு கிடைக்கும். அதற்கான நல்லறிவையும், நன்மனத்தையும் எல்லாம் வல்ல இறைவன் புத்தாண்டில் நமக்கு நல்க வேண்டுமென்று தேசிய தினமாகிய இன்று பிரார்த்திப்போம்.

# முருக வழிபாடும் கல்விப் பேறும்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளில் ஒன்று.

க. பரமசாமி
(கல்விமானி பகுதி I)

முருக வழிபாடு தமிழ் நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. பண்டைத் தமிழ் மக்கள் முருகனை மலையுறை தெய்வமாகவைத்துப்போற்றினர். ஐயாயிரம் வருடங்கட்கு முற்பட்ட தொல்காப்பியத்திலே 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது இதற்குச் சான்றாகும். கொற்றவையின் குமரனாகவும் போர் வெற்றி தரும் தெய்வமாகவும் முருகன் பண்டைய இலக்கியங்களிற் போற்றப்படுகின்றான். முருகு என்ற சொல் அழகு இளமை, தெய்வீகம் முதலிய பண்புகளைச் சுட்டி நிற்பது. மனத்தைக் கவரத்தக்க இம்மூன்று பண்புகளையும் ஒருங்கேகொண்ட ஒரு தெய்வமாக பண்டைத் தமிழ் மக்கள் முருகனைக் கண்டார்கள்.

இத்தமிழ் நாட்டு முருகக் கடவுள்காலப்போக்கில் வடநாட்டுக் கௌமார சமயத் தெய்வமான சுப்பிரமணியக் கடவுளுடன் இணைக்கப்பட்டார் திருமுருகாற்றுப்படை பரிபாடல் முதலிய இலக்கியங்களிலே கௌமாரத்துடன் இணைந்த முருகக்கடவுளையே காணுகிறோம். பரிபாடலிலும் கலித்தொகையிலும் முருகன் சிவகுமாரன் எனக் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். திருப்பரங்குன்றில்முருகன் அமர்ந்து அடியார்க்கு அருள் செய்வதுபற்றிப் பரிபாடல் குறிப்பிடுகிறது. படிப்படியாகத் தமிழ் நாட்டிற்பரவி வந்த ஆரியர் செல்வாக்கு தமிழ்முருகனுக்கும்கௌமாரத்தின் குமரக் கடவுளுக்கும் வேறுபாடில்லாத ஒரு நிலையை உருவாக்கியது. இன்று நாம் வழிபடும் முருக வழிபாடு கௌமாரத்தின் குமரக்கடவுளின் வழிபாடாக அமைந்திருக்கிறதென்பதே பொருந்தும்.

திருமால், கொற்றவை, சிவன் வருணன் முதலாய பழந்தமிழரின் ஏனைய தெய்வங்களிலும் பார்க்கக்கல்வியுடன் நெருங்கிய தொடர்புடையவராக முருகக்கடவுள் போற்றப்பட்டு வருவதை இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். முருகனது ஒரு திருமுகம் வேதங்களின் உட்பொருளை விளக்கும் திறனைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறது. ''எஞ்சிய பொருள்களை ஏமமுற நாடித் திங்கள் போலத் திசைவிளக்குமே'' என்பது நக்கீரர் வாக்கு. இன்றைய திரைப்படப் பாடல்களிற்றானும் முருகன் ''ஞானப்பழம்'' என்று வழங்கப்படுகின்றான். அறிவைத்தரும் ஆசிரியனாகவும் அறிவின் கனிவாகிய ஞானப் பழமாகவும்திகழும் முருகனைக் கல்வியுடன் தொடர்புபடுத்துவதாக பல வரலாறுகள் உண்டு.

குருபரன் என்பது முருகனுடைய ஒரு பெயர். பரம்பொருளாகிய இறைவனுக்கே பிரணவத்தின் உட்பொருளை ஆசிரியனாக இருந்து உபதேசித்தவன் என்பதையே மேற்படி பெயர் சுட்டி நிற்கின்றது. இச்செய்தியைப் புராண வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. முருகன் பிரமனிடம் பிரணவப் பொருளைக் கேட்டபோது அதை அறியாது பிரமன் திகைத்தான். அவனைக் குட்டிச் சிறை வைத்த பின் முருகக் கடவுள்தாமே பிரமனது படைத்தற்றொழிலை நடத்தி வந்தார். அப்பொழுது பிரமனைத்தண்டித்ததற்குக் காரணம் கேட்க வந்த தந்தையாகிய சிவனிடம் பிரணவத்தின் பொருள் தெரியாதவன் எவ்வாறு அண்ட சராசரங்களைப் படைக்க முடியும்'' என வினவினார். முருகக் கடவுள் ''அப்படியானால் உனக்குத் தெரியுமா? எனக் கேட்டார் தந்தை. தெரியும் வேண்டுமானால் உங்கட்கே உபதேசிக்க முடியும்'' என்றார் தனயர். அவ்வாறு உபதேசிக்கவும் செய்தார். அதனால் குருபரன், சாமிநாதன், குமரகுரு, சிவகுரு, சிவகுருநாதன் முதலிய சிறப்புப் பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறார். தமிழ் முனிவராகிய அகத்தியருக்கு தமிழ் இலக்கணத்தைப் போதித்தவர் முருகக் கடவுள் எனவும் வரலாறுகள் உண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தலைவர், [illegible] புலவர்களுள்ளே ஊமைப் பிள்ளையாக இருந்து இறை

யனார் அகப்பொருளின் உரைச் சிறப்பை மதிப்பிட்டவர் எனப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது.

தமிழ் மூதாட்டியான ஔவைக்கும் அநுபூதிச் செல்வராகிய அருணகிரிநாதருக்கும் ஞானப்பழமாகக் காட்சி தந்தவர் முருகக் கடவுள். வாழ்நாள் முழுவதும் காமலீலைகளில் ஈடுபட்டு அதனால் உண்டான நோயால் தற்கொலை செய்ய முயன்ற அருணகிரிநாதரைத் தடுத்தாட்கொண்டு அவர் உள்ளத்தில் அறிவைப் பெருக்கித் தம்மைப் பாடச் செய்தார். ஐந்து வயது வரையும் ஊமைப்பிள்ளையாக இருந்த குமரகுருபர அடிகளுக்கு ஊமை நீங்கச் செய்து அவரால் பாடப்பட்டவர். குமரகுருபரர் தமது கந்தர் கலிவெண்பாவில்'' எழுத்துமுதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமை பாவித்து....'' என முருகக் கடவுளின் அருளைக் குறிப்பிடுகின்றார்.

கல்வியுடன்தொடர்பு படுத்தப்பட்ட முருகக் கடவுள் தம்மடியை அடைந்து வழிபடுபவர்களுக்குக் கல்வியின்பத்தை நல்குவார் என்பதுவெள்ளிடைமலை. முருகக் கடவுளை எதிர்த்துப் போரிட்ட சூரபதுமன் தானும் அவரது பேருருவப் பொலிவைக் கண்டு உருகி உள்ளமழிந்து ''போயின அரந்தை போதம் புகுந்தது'' என்று கூறித் தனக்குச் செருக்கு நீங்கி அறிவேற்பட்டதாகக் கூறுவதைக் கந்தபுராணத்திற் காண்கின்றோம். எதிர்த்துப்போரிட்ட ஒருவனுக்கே அவரது தரிசனத்தில் அறிவு கிட்டியதெனில், அவருக்கு அடியவராகி அவரை வழிபடுகின்றவர்களுக்குக் கல்விப்பேறு கிட்டும் என்பதுதானே போதரும்.

வழிபாட்டின் மூலம் கல்விப் பேற்றை அடையலாம் என்பதை உளவியல் வழியாகவும் நாம் உணர்த்தலாம். உள்ளத்திலே தூய்மை இருந்தாற்றான் கற்பவை மனத்தில் தங்கும். இத்தூய்மையைப் பெறுவதற்குப் பத்தி ஒரு சிறந்த சாதனம். கணத்திற்குக் கணம் ஆயிரம் ஆயிரம்எண்ணங்களை உருவமாக்கி அடிலையும் மனத்தை ஒரு குறிப்பிட்ட சிந்தனையில் நாட்ட வேண்டும், அதனையே சிக்கெனப் பற்றிப் பிடிக்க வேண்டும். இதனையேதியானம் என்று மொழிவர். இத்தியானம் செய்வதற்கு ஏதோ ஓர் உணர்வு, உருவத் தோற்றம் மனத்திற்கு தேவைப்படுகின்றது. மனம் ஏதாவதொன்றைச் சார்ந்து நிற்க வல்லது. அஃது உருவமற்றதைக் காணுக உருவத்தை உருவப்படுத்தி நினைக்க வல்லது அன்று. எனவே, சைவசமயத்தில் உருவ வழிபாடு உண்டாயிற்று. அப்படிக் கொடுக்கப்படும் உருவம் மனத்தைக் கவருவதாக அமைய வேண்டும். அழகு, இளமை, தெய்வீகம் ஆகிய பண்புகள் இணைந்த முருகனது உருவப் பொலிவு வழிபடும் அடியவரின் உள்ளத்தைக் கவருவதுடன் அழகிற்குரிய கலை உணர்ச்சியையும், இளமைக்குரிய ஊக்கத்தையும், தெய்வீகப் பண்பிற்குரிய வல்லமையையும் மனத்திற்குள் புகுத்த வல்லது இவ்வாறு ஊக்கமும் வல்லமையும்கலை உணர்வும் கொண்ட தூய உள்ளத்திற் கல்வியறிவின் பேற்றினைப் பெற முடியும்.

எனவே, கல்விக்கும், கல்விப் பேற்றினுக்கும் முருக வழிபாடு பேருதவி புரியும் என்பதில் ஐயம் இல்லை. வள்ளுவர் கூறுவது போலக் கல்வியின் பயனும் அதுவேயாகும்.

# ஐயாறன் எழுதுவது

''இந் நன்னாள் மகிழ்ச்சியும்,
இன்பமும் கொடுப்பதாகுக.
புத்துணர்ச்சி எங்கும் மலர்ந்து
நறுமணம் கமழ்க?
தங்கட்டுப் பெருவாழ்வும் திருவும்
பெருகுகவென்று இப்புத்தாண்டில்
மனமார வாழ்த்துகின்றேன்''

என்பன போன்ற சித்திரை புதுவருட வாழ்த்துக்களை சில அன்பர்கள் அனுப்பியுள்ளார்கள். எனக்குக் கிடைத்த அந்த வாழ்த்துக்களை இதன்மூலம் உங்களுக்கெல்லாம் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஃ ஃ ஃ

இன்று பலரும் கோவில்களுக்குக் குடும்பத்துடன் சென்று வழிபடுவர். பிறக்கும் புதுவருடம் நன்மையாக இருக்கவேண்டுமென்றும், தீங்குகள் ஏதும் வராமல் தங்களையும் தங்கள் குழந்தைகுட்டிகளையும்பாதுகாக்கவேண்டுமென்றும் கடவுளைக் கேட்டுக்கொள்வார்கள்.

கோவிலிலிருந்து திரும்பியபின், இப்பெருநாளை மகிழ்ச்சியுடன் எப்படிக் கொண்டாடுவர் என்று ஓர் அன்பரைக் கேட்டேன். புதுவருடப்பெருநாளை முன்னிட்டு விடுமுறைகள் விட்டுள்ளதால், அதற்காகப் பல 'போத்தல்களை' வாங்கி வைத்துள்ளதாகவும், குடிப்பதுதான் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும்வழி என்று பலர்கருதி அவ்விதமே செய்வதாகவும் அறிய மிக வருத்தமாகவுள்ளது.

ஃ ஃ ஃ

மதுபானம் கூடாதென்று தமிழ் வேதமான திருக்குறளும், பௌத்தமும் உள்ளிட்டு, பல சமய நூல்களும் கண்டிப்பாகக் கூறுகையில், அதற்கு நேர் மாறாக நடப்பதாயின், கோவிலுக்குப் போய் கடவுளை வழிபட்டு வந்ததால் என்ன பயன்?

அந்தப் பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அதை விடுவதென்பது சுலபமல்லதான். ஆனால் நெஞ்சில் உறுதியும், இறை அருளும் இருந்தால் இந்தப் பழக்கத்தை விடுவது அசாத்தியமல்ல. அந்நியர் இங்கு 450 வருடகாலம் ஆட்சிசெய்தபோது மது அரக்கனுக்கு நம்மை அடிமைப்படுத்தி விட்டனர். அரசியல் பொருளாதார அடிமைத்தனங்கள் நீங்கினாலும், இந்த மதுஅரக்கனின் அடிமைத்தளையில் இருந்து விடுதலைபெறாவிடில் என்ன பயன்.

''இன்று புதிதாகப் பிறந்தோம்'' என்று ஒவ்வொருவரும் நினைத்து, புதுவாழ்வை ஆரம்பிக்க

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உறுதியும் உத்தரவாதமும் உள்ள



தங்க வைர நகைகளுக்கு புகழ்பெற்ற ஸ்தாபனம்

புதிய ஆபரண மாளிகை

NEW JEWEL PALACE

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்

போன்: 7042

# எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணுவோம்

மனிதர்களாகிய நாம் எமது மகத்தான இந்தச் சிறிய மூளையை வைத்துக் கொண்டு எத்தனையோ சாதனைகளையெல்லாம் புரிகின்றோம். நாம் கண்டு அனுபவிக்கும் சகலவிதமான புதிய சாதனங்கள், செய்கைகள் யாவுமே, எமது சிறிய மூளையின் பயனாகக் கிடைத்தவைகளே! நாம் ஐம்பெரும் பூதங்களின் கூட்டுச் சேர்க்கையிலே உற்பத்தியாகியிருக்கிறோம். இயற்கைத் தத்துவமானது ஐம்பெரும் பூதங்களினுள்ளேயே அடக்கம். இயற்கையை ஒரு சமுத்திரமாகக் கொண்டால், மானிடராகிய நாம் அதிலுள்ள ஒரு சிறு திவலையே! சிறு திவலையாகக் கருதப்படக்கூடிய நாம், விதவிதமான எண்ணங்கள், வல்லமையுடையவர்களாகத் திகழ்கின்றோமென்றால், இயற்கை எவ்வளவு ஆற்றலுடையதென்பதை நாம் ஊகிக்கமுடிகிறதல்லவா! அந்த இயற்கையையே நாம் கடவுளெனக் கருதுகின்றோம். காலத்தின் கோலத்தினாலும், சுயவர்களின் சூழ்ச்சிகளினாலும் கடவுளை வேறு விதமாகப் பொருள்கொள்ளும் நிலையில் மனித சமுதாயம் அறியாமையில் மங்கிக் கிடப்பது கண்டு வருந்தவேண்டியுள்ளது.

உண்மையறிவும், உள்ளத் தூய்மையுமே திருவருளாற்றலை மனிதரிடம் உற்பத்தி செய்யவல்லன. அதற்கு எல்லாவுயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டும். இரக்கம் என்ற சுபாவம் எம்மிடம் ஏற்பட்டால் எல்லாம் வல்ல திருவருளாற்றல் எம்மிலே ஒளிவிடத் தொடங்கிவிடும். ஆனந்தம் குடியிருக்கும். எட்டுச் சித்திகளையும் இயற்றக்கூடிய மனோவலிமையுருவாகும். அப்படியான வலிமையேற்படின் மரணமில்லாப் பெருவாழ்வு கிட்டும். ''நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்மை அச்சத்தை வேட்கைதனை, அழித்துவிட்டால் அப்போது சாவும் அங்கே அழிந்துபோகும்'' என்று அருட்சோதி வள்ளலார் எமக்கு அறிவுறுத்தியிருக்கின்றார். ''பொறிவாயில் ஐந்தவித்தான், பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வார்'' என்று பொய்யில் புலவராகிய வள்ளுவர் பெருமான் கூறுகின்றார். சாதி, மத, இன, நிற பேதங்களைத் தவிர்த்து விளங்கும் சுத்த சமரச சன்மார்க்கமாகிய மெய்நெறியைக் கைக்கொண்டொழுகுதலே பிணி, மூப்பு, மரணத்தைத் தவிர்க்கவல்ல சாதனம். எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணி வாழ்வோமாக!

—மதிவாணர்—

புகைப்பட ரஸிகர்களுக்கும்
மற்றும்
ஆதரவாளர்களுக்கும்
எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சித்ராலயா

[படப்பிடிப்பாளர்]

18, ஸ்ரான்லி றோட், — யாழ்ப்பாணம்.

## ஆண்டு மலருதம்மா

— 'அல்வை த. சுந்தரன்' —

நாடு சிறக்குது வீடு சிறக்குது
ஞாலஞ் சிறக்குதம்மா! — புது
வாழ்வு பிறக்குதம்மா! — புதர்க்
காடு விளையுது மேடு விளையுது
கண்ணுங் குளிருதம்மா — புது
எண்ணந் துளிர்க்குதம்மா!!

★

ஏரின் முனைகொண்டு ஊரின் வினைகொன்று
ஏற்றம் விரையுதம்மா! — பெற்ற
பேறு நிறையுதம்மா — மழை
மாரி தருமுகில் வாரித் தரப்புது
ஆண்டு மலருதம்மா! — மிடி
மாண்டு தளருதம்மா!!

★

சாதி மதமெனும் பேதம் இல்லையினிச்
சேர்ந்து மகிழ்வரம்மா! — அருள்
சேர்ந்து திகழ்வரம்மா! — புதுச்
சோதி ஒளிவரப் பாதை தெளிவுறச்
சிந்தை தெளிவரம்மா — இசைச்
சிந்து மொழிவரம்மா!!

★

பாதகமும்பழி பாவங்களும்அறப்
பாரொளி வீசுதம்மா — இருள்
வேரொடு செத்ததம்மா! — மாந்தர்
வேதன் அருட்டிருப் பாதந் தொழுதருள்
வேண்டப் புலருதம்மா — புது
ஆண்டு மலருதம்மா!!

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

* PERKINS பேக்கின்ஸ் மோட்டார் வள்ளமும் அதன் உபஉறுப்புக்களும்
* B. M. C. பி. எம். ஸி. ரக் உதிரிப்பாகங்கள்
* HOLDEN ஹோல்டன் கார் உதிரிப்பாகங்கள்

சகல விதமான றேடியேற்றர்களும், சைலென்சர்களும் சைலென்சர் பைப்புகளும் எம்மிடம் கிடைக்கும்

சமுத்திரா திரேட்ஸ் லிமிட்.

23/2 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7236 தந்தி: 'சமுத்திரா'

## நடிகையின் சந்தேகம்

அமெரிக்க சினிமா நடிகை ஒருவர் மணமானவுடன் தன் கணவரிடம்- இதுவா உங்கள் வீடு?

கணவன்- ஆம், டார்லிங்.

நடிகை- இது எனக்குப் பழக்கமான வீடுபோல் தோன்றுகிறதே. இதற்கு முன் நான் உங்களைக் கல்யாணம் செய்யவில்லை என்று நிச்சயமாகத் தெரியுமா?

—இமையாணன்

## ஓஹோ, அப்படியா!

ஒருவர்- சார், அதோ எரிகிறதே அந்தப் பெரிய கட்டிடத்தை 'இன்சூர்' செய்திருந்தால் நல்லது.

மற்றவர்- எரிகிற கட்டிடமே 'இன்சூரன்ஸ்' கம்பனிதான் சார்.

—இமையாணன்

## "புத்தாண்டே நீவா பொலிந்து"

— வ. குகசர்மா —

தென்றல் அசைந்துவர தேமாங் குயில்பாட
பொன்றவிரும் பூவும் பொலிவெய்த—மின்ற
மங்கும்
மெத்து வசந்தமெனும் மெல்லியளை முற்கொண்டு
புத்தாண்டே நீவா பொலிந்து.

பண்ணெனவே யின்சொற் பகரும் கனிவாயர்
மின்னெனவே குத்து விளக்கேற்றி—வண்ணமிகு
நித்தம் களிகூர செல்வமனை கோலஞ்செய்
புத்தாண்டே நீவா பொலிந்து.

கோலப் பிறைநெற்றி குங்குமத்தின் பொட்டிட்டு
ஏலக் கருங்கூந்தல் பூச்சூடி — சீலமுடன்
பொங்கலிட்டுப் போற்றும் மகளிர் மனம் மகிழ
மங்களம்சே ரசண்டேநீ வா.

பாலகர் தாம் மகிழ பஞ்சம் பிணியகல
சீலமனை தோறுநற் சீர்பொங்க — கோலமுறு
மாலகற்று நீக்கும் வயங்கு தமிழ்வாழ
ஞால வாண்டே கிளர்ந்து.

உலக முன்னணியில் நிற்கும்

றேபியலக் பெயின்ற்

விற்பனையாளர்களும்

வடமாகாண ஏகவினியோகஸ்தர்களும்

நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிரெட்

யாழ்ப்பாணம்

போன்: 7256

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஞானம்ஸ் ஸ்ருடியோ



போன்: 7067

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது நன்றி நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**ஆனந்தா அச்சகம்**
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி: அச்சகம் தொலைபேசி: 348

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள் !
**சிவரும்ஸ்**
[பிரபல பிடவை வியாபாரிகள்]
12, பிரதான வீதி — யாழ்ப்பாணம்.
(நூதனசாலைக்கு முன்பாக)

எல்லா வாகனங்களுக்குமுரிய
உப உறுப்புகள்
**லூக்கஸ் பற்றறிகள்**
1½ வருட உத்தரவாதத்துடன் விற்கப்படுகின்றன
போன்: 7022
செல்லப்பா அன் கோ
4/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக
**நோர்தேண் இன்டஸ்றீஸ்**
(உத்தரவாதத்துடன் டயர் நிரப்புபவர்கள்)
8/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலையாரின்
**புதிய வெளியீடுகள்**
234, கே கே எஸ் றோட், யாழ்ப்பாணம்.
உயர்தரவகுப்புகளுக்குரியவை

| | ரூ. சதம் |
|---|---|
| தாவரவியல்: ஆசிரியர் நா. இராமநாதன் கிளேஸ் பதிப்பு | 15 - 00 |
| சாதாரண பதிப்பு | 10 - 00 |
| இரசாயனம்: ஆசிரியர் A. K. சர்மா | 8 - 00 |
| பௌதிகம் பகுதி 1: ஆசிரியர் A.K. சர்மா | 4 - 00 |
| கருத்துரைக் கோவை: Dr. K.A. சதாசிவம். | 2 - 00 |
| படவரைகலையில் எறியங்கள்: க. குணராஜா B. A. Hons | 8 - 60 |
| படவுரைகலையில் வரைப்படங்கள்: க. குணராஜா B. A. Hons | 8 - 40 |
| தமிழிலக்கிய வரலாறு: பேராசிரியர் V. செல்வநாயகம் M. A. | 4 - 75 |
| தமிழ் உரைநடை வரலாறு: பேராசிரியர் V. செல்வநாயகம் M. A. | 2 - 50 |
| பாஞ்சாலி சபதம் உரை: V. C. கந்தையா | 2 - 75 |
| ஒலிபரப்புக்கலை: சோ. சிவபாதசுந்தரம் | 6 - 00 |
| உயர்தர இரசாயனம்: சிவபாலன் | 30 - 00 |
| மனோன்மணியம் வசனநடை: வித்துவான் க. சொக்கலிங்கம் | 1 - 25 |


## சித்திரை வருட சிறுகதை

# தேர்த் திருவிழா

**— பட்டனைந்து —**

இன்னொரு நாள் கழிந்து. நாளையபொழுது விடிந்தால் சித்திரை வருடப் பிறப்பு. மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில்தேர். புத்தாடை தரித்து பக்தகோடிகள் மருதடியானின் திருத்தேரின் ஊர்வலத்தில் கலந்துகொண்டு நிற்கும் காட்சியே ரம்மியமானது. வீதிகளின்மருங்கெல்லாம் சிதறிக்கிடக்கும் தேங்காய்த் துகழ்களுக்கு எண்ணிக்கையே சொல்ல முடியாது. பக்தகோடிகள் போவதும், வருவதுமாக இருக்கும் அந்தக்காட்சி விழாக்கோலம் பூண்டிலங்கும்,

''மருதடிப்பிள்ளையாரே..''

நீண்ட ஒரு பெருமூச்சின் முடிவாக அந்த வார்த்தைகள் வேலுப்பிள்ளையின்வாயிலிருந்து சிதறின.

''அப்பு...போன சித்திரை வருசத்திற்கு எனக்குப் புதுச்சட்டை வாங்கித்தந்து மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் தேருக்குக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொல்லி ஏமாற்றிப் போட்டாய்..., அதுதான்போனது போகட்டும், அப்பொழுது சொன்னுயே வாறவரிசம் கட்டாயம் உனக்குப் புதுச்சட்டை புதுச்'சோக்கான' மணிக்கூடு; மோதிரமெல்லாம் வாங்கித் தாற னெண்டு.....''

போனருடம், நிலைமையைச் சமாளிப்பதற்காக வேலுப்பிள்ளையர்இப்படியெல்லாம் சொல்லியிருந்தார். அதை இன்னமும் மறக்காமல் நினைவு வைத்திருந்து நேற்றுக்கேட்டுப் போட்டான் அவரின் ஒரேயொரு செல்வமகனன அரியம். அரியத்திற்கு இப்பொழுது பன்னிரெண்டு வயது ஆகிறது. வேலுப்பிள்ளையருக்கு, அரியத்தோடு இன்னமும்ஆணு பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள் பிறந்தன. ஆனால், அதுகள் வேலுப்பிள்ளையரோடோ வேலுப்பிளையர் அதுகளோடோ சேர்ந்து வாழ இறைவன் விட்டுவைக்கவில்லை.

அந்தப் பிள்ளைகளின், மீதிருந்த அவா எல்லாவற்றையும் மீதே செலுத்தி அவனுக்கு ஒருகுறைதானும்வராமல் கவனித்துக் கொண்டு வந்த வேலுப்பிள்ளையருக்குப் போனசித்திரை வருடத்திற்கு உடுபுடவையோ, கோவிலுக்குக் கூட்டிச் சென்றுவிளையாட்டுப் பொருட்களோ வாங்கிக்கொடுத்து அவனை மகிழ்ச்சிப் படுத்த வசதியேற்படாததை நினைத்தால் நெஞ்சை உறுத்தும்.

கைவசம் இருந்தகொஞ்ச நஞ்சப் பணத்தோடு அவரது மனைவி பார்வதியின் உடைமைகள்சிலவற்றையும் வித்துச்சுட்டு, சும்மா கிடந்த அந்த மூன்று ஏக்கர் காணிக்குள்ளும் வாழைத் தோட்டம் ஒன்றையும் பயிரிடுவதில் செலவு செய்த அவரிடம் சமீபித்துக் கொண்டுவந்த சித்திரை வருசத்திற்கு தன்னுடைய மகனுக்குப் புதிய உடுபுடவையோ நல்ல உணவு வகைகளோ வாங்கிக் கொடுத்து மகிழ்வுறச் செய்யும்வசதி எப்படி வரும்?

அடுத்தவருடம், இப்பொழுது பயிரிடப்பட்டிருக்கும் வாழைத்தோட்டம் தான் செலவுசெய்ததுபோல் இன்னமும் இரண்டு பங்கைக் கூடுதலாகத் தருமென்ற எண்ணத்தில்மகனுக்கு அந்த வார்த்தைகளைக் கூறிச் சமாதானப் படுத்துவதைத்தவிர அவருக்குக்கு வேறொன்றும் புலப்படவில்லைஅப்பொழுது

அதற்கிடையில், மார்கழியில் இப்படியொரு பேய்க்காற்றும், பெருமழையுமாக வந்து வாழைத்தோட்டத்தை சீர்குலைக்கும் என்று அவர் கண்டாரா? நல்ல விலையில்விற்கவேண்டிய வாழைக்குலைகளெல்லாம் அரைவிலை கால்விலை, விற்றதனுல் தேறிய பணத்தோடு அலைட்டையிலும் கடனைத் தண்ணியை வாங்கி மீண்டும் வாழைத்தோட்டத்தை பயிரிட்டுவிட்டு வெறுங்கையோடிருக்கும் அவரிடம், இம்முறையும் மகனுக்கு உடுபுடவை வாங்கிக் கொடுத்து மருதடிப்பிள்ளையாரின் தேருக்குக் கூட்டிச் செல்லும் நிலைஎப்படியிருக்கும்?

மருதடிப் பிள்ளையாரே...

மீண்டும் பெருமூச்சுக்கிடையில் இந்த வார்த்தைகளை உச்சரித்துவிட்டு நிமிர்ந்தபோது, அவர்எதிரேபார்வதி வந்து நின்றாள்.

''என்னங்க....நாளைக்கு விடிந்தால் சித்திரை வருசம்....அதோடு மருதடியானின் தேரும் நாளைக்குத் தானே... நல்லநாள் பெருநாளாகப் போனவருசமும் நாங்க போகேல்ல.....மருதடிப் பிள்ளையாரே என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தால்முடிந்திடுமா...?''

''என்னபார்வதி சொல்லுகிறாய்... உனக்குத் தெரியாதே வீட்டு நிலைமை...: அவன் பிள்ளையைத்தான் போனவருசமும் ஏமாத்திப்போட்டன்...இந்தவருசமும்....''

''இப்ப நான் சொல்லவந்ததும் அதுதானே... எனக்கோ உங்களுக்கோ வரிசம் கொண்டாட முடியல்லயே என்று அழவந்தேன்...''

''நீயிப்ப அழவும் வேண்டாம் சிரிக்கவும் வேண்டாம்...: என்னையிப்ப என்ன செய்யச் சொல்லுறாய்...,''

''பெருநாளெண்டால், குழந்தைகளுக்குத் தானே குதூகலம்.. ஊரிலே எல்லாப் பிள்ளைகளும்புது உடையும் பெருமிதமுமாக திரியேக்க எங்கடபிள்ளை அதுகளைப் பார்த்து ஏங்கவைப்பதா எங்கடமை...''

''அதுசரி கையில ஒரு சதமுமில்லையே இப்ப என்ன பண்ண...''

''நீங்கநினைத்தா, ஆகாத ஒன்றுஇது...சும்மா உதால வெளிக்கிட்டுப் போயாவது பார்த்துக் கொண்டு வாருங்க..,இப்படியே இருந்து யோசித்துக் கொண்டிருந்தால் முடிந்திடுமா....எழும்புங்க, எழும்பிப்போய் எப்படியாவதுபார்த்துக்கொண்டு வாருங்க ...சீக்கிரம்..,''

''உம்...ம்.,...

ஏதோ மருதடியான் மனம் வைத்தால் நாளைக்கு மருதடியானிட்டைப் போகலாம்... ஏதோபோய்ப் பார்ப்பம்..''

திண்ணையில், கிழேபோட்டுக்கொண்டிருந்த சால்வைத் துண்டை எடுத்து உதறித் தலைப்பாகை கட்டிக்

[7-ம் பக்கம் பார்க்க]

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !
**பாரத் ஸ்ருடியோ**
போன்: 252
கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது உளங்கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
உங்களுக்குத் தேவையான சகலவிதமான
இசைக் கருவிகளுக்கும்
அதன் உப-உறுப்புகளுக்கும் எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்.
**நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ்**
23, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்.
பழுதடைந்த இசைக்கருவிகளையும் எமது இசைக்கருவி திருத்தும் நிபுணர்களைக் கொண்டு உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த் திருவிழா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு நடக்கிருர் வேலுப்பிள்ளையர்.

செம்பாட்டுமண் தரையில் நின்று வெட்டிப்பாத்தியமைத்து; நாளேதோறும் பாத்திகளைத் திறந்து நீர்ப்பாய்ச்சி அடைத்து வாழைத் தோட்டத்திற்கே உழைப்பையெல்லாவற்றையும் நல்கும் அவரது மேனித்தசை நரம்புகள் விம்மிப்புடைத்துக் காட்சி அளிக்கின்றன. அவரது, கால்களின் அடிப்பகுதிகள் செம்பாட்டு மண்ணுக்கே உரிய சென்னிறம் கலந்து தெரிகிறது.

நடந்து வந்து, தெருவில் கால் வைத்தவரின் சிந்தனையில் ஏதோ படவே மடியுள் கையை விட்டுத் துளாவுகிருர். இருபத்தைந்து சதக்குத்தி கையில் அகப்படுகிறது. எடுத்து ஒரு முறை பார்த்து விட்டுமீண்டும்மடியிலேயே வைத்துக்கொண்டு நடந்துவந்த அவர் நினைவில்....

அப்பு....போன சித்திரை வருசத்திற்கு எனக்குப் புதுச் சட்டை வாங்கித்தந்துமானிப்பாய் மருதடிப்பிள்ளையார் தேருக்குக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொல்லிஏமாற்றிப் போட்டாய்... அது தான் போனது போகட்டும், அப்பொழுது சொன்னுயே வாறவரிசம் கட்டாயம் உனக்குப் புதுச்சட்டை புதுச் 'சோக்கான' மணிக்கூடு; மோதிர மெல்லாம் வாங்கித்தாற னென்டு....''

மகன் சொன்ன வார்த்தைகள் மீண்டும் நினைவில் தைக்கின்றன. மெல்ல நடந்து, சந்திக்கு வந்தபோது சரவணை அண்ணரின் பார்வையில் பட்டுவிடுகிருர் வேலுப்பிள்ளையர்.

''ஏய்,.. வேலுப்பிள்ளை, என்ன யோசித்துக்கொண்டு வாருய்...?'' சரவணை அண்ணைதான் கேட்டார்.

''ஆரது... சரவணை அண்ணையே... தெரியாதே நாளேக்குச் சித்திரை வரிசம் அதுதான்...''

''சித்திரை வரிசம் என்டா அதுக்கேன் யோசிப்பான்...''

''மகன் பொடியன், உடுப்பு வாங்கித் தரச் சொல்லி ஒர்றைக்காலில் நிற்கிருன்... அதுதான் இப்படி வெளிக்கிட்டன். பெரிய கடைப்பக்கம் போய்ப் பார்ப்பமென்டு... போறதுக்கும் பஸ்ஸுக்குக் காசு போதாது .. அண்ணே, காசிருந்தால்ஒருரூபாய் தாறியே, பிறகு தாறன்...''

சரவண அண்ணர், மடியைத் துளாவிக் காசெடுத்துக் கொடுக்கவும், பஸ் சந்திக்கு வருவதற்கும் சரியாக இருக்கிறது. ஓடிப்போய், ஏறிக்கொண்டவர் மனதுக்குள் ''மருதடிப் பிள்ளையாரே'' என்று சொல்லிக் கொள்ளவும் தவறவில்லை.

''வேலுப்பிள்ளை அண்ணே என்ன இங்கால... போன மழைக்கு உன்ரை தோட்டம் நல்லாப் பாதிக்கப்பட்டுட்டென்று கேள்விப்பட்டேனே... இப்ப என்ன செய்திருக்கிருய்?'' சந்தைக்குள் அப்பொழுது தான் வந்து நுழைந்த வேலுப்பிள்ளையரை கண்டு வாழைக்குலை வியாபாரி ஒருவன் இப்படிக் கேட்கிருன்.

''வேறை என்னத்தைச் செய்ய.. அதைத்தான் கடன்பட்டுக்கிட்டு மீண்டும் துவங்கியிருக்கிறன்... ஏதோ அந்த மருதடியான் கண்ணை முளித்தாப் பிழைத்திடலாம்...'' வேலுப்பிள்ளையர் இதைச் சொல்லி முடிக்கிருர்.

''அப்படியே சங்கதி... ஆ... ஹா... இதுல இரண்ணை இப்படியிரு...'' இருந்துகொண்டிருந்த 'பக்கூஸ்' பெட்டியைத் தான் எழுந்து நின்றுகொண்டு வேலுப்பிள்ளையரை இருக்கவைக்கிருன் அந்த வாழைக்குலை வியாபாரி.

''அநேகமாக, எந்தமட்டில் குலைவெட்டலாம்...''

''இந்த வாற ஆவணிக்கெல்லாம் சந்தைக்கு வந்திடுமென்று நினைக்கிறேன்...''

''அப்படியெண்டா, இந்த முறை உங்கட தோட்டத்தில உள்ள குலைகளெல்லாத்தையும் எனக்கே தந்திடுங்க... நல்ல விலைபோட்டுத் தந்திடுறேன்... ஆ... இந்தா அண்ணே, இந்த இருபத்தைந்து ரூபாவையும் முற்பணமாக வைத்துக் கொள்...'' பிடித்தபிடியிலேயே வேலுப்பிள்ளையரை விடாமல் காசையெடுத்து அவரின் கைக்குள் வைத்து அனுப்புகிருன், வாழைக்குலை வியாபாரி.

அந்த இருபத்தைந்து ரூபாவில், மகனுக்குக் காற்சட்டையும், மேற்சட்டையும் வாங்கப் பதினைந்து ரூபாவைச் செலவழித்துவிட்டு மீதிப்பத்து ரூபாவோடு பஸ்ஸில் வந்து ஏறிக்கொண்ட வேலுப்பிள்ளையரின் கற்பனையில்...

— மறுநாள்...

வேலுப்பிள்ளையரும் மனைவியும் மகன் அரியத்திற்குப் புதிய சட்டைகளை அணிவித்துக்கொண்டு நடையாகவே வயல்வெளிகளுக்குள்ளால் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்கிருர்கள்.

''ஆ... ஜில்... ஜில்... தும்பு மிட்டாய்.

''ஐஸ் சர்பத்... சோடா... சோடா... ஐஸ் சர்பத்...''

''ஸ்டார் ஐஸ்கிறீமையே என்றும் சுவையுங்கள். .''

வீதியில் வந்து, மிதந்த அவர்களின் காதுகளில் வழமையான தேர்த்திருவிழாக் கோலத்தின் எதிரொலிகள்

[8ம் பக்கம் பார்க்க]


கணபதி ஸ்ரோர்ஸ்
யானை மார்க்
**நல்லெண்ணெய்**
சுத்தமான இலங்கை எள்ளில்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
சொந்தக்காரர்: கா. சு. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
18, கஸ்தூரியார் வீதி, [—] யாழ்ப்பாணம்.

**[சிபாகோ]**
மருந்தூட்டப்பட்ட கேசங்களின் இணைபிரியா நண்பன். இதைத் தினந்தோறும் தலையில் தேய்த்து வருவதனுல் மயிர் உதிர்கல், இளம் நரை, சொடுகு இவைகளை நிறுத்தி மயிர்களை அடர்த்தியாகவும், பளபளப்பாகவும், கருமை நிறமாகவும் வளரச் செய்யும் [Hair tonic] மேல் நாட்டு வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப்படி விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட ஒரேஒரு Hair tonic வடமாகாண ஏக விநியோகஸ்தர்:—
**C. S. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்.**
[மருந்துச்சரக்கு] வாசனைதிகள் விற்பனையாளர்கள்]
51, கே. கே. எஸ். ரேட், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

புதிய
கிரமபோன்


றெக்கோட்டுகள்
புதுவருஷத்தை முன்னிட்டு
அனேக புதிய படப்பாடல்களை தருவித்து இருக்கிறேம்
தேவைக்கு உடன்தொடர்புகொள்ளவும்
மற்றும்
ரேடியோக்கள் அம்பிளிபயர்
விற்பனைக்கும் திருத்துவதற்கும்
நம்பகமான இடம்
**S. சுலைமான்கண்டு**
அன் பிறதர்
5, 7, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**மங்களகரமான புதுவருட வாழ்த்துக்கள்**
இலங்கையில் தலைசிறந்த பீடித் தொழிலாளர்களினுல் திறமையுடன் திருப்தியுடன்
முதல் ரகப் புகையிலை கொண்டு தயாரிக்கும்
**786 கல்கி பீடிகளும்**
மற்றும்
பிரிட்டிஷ் [சிலோன்] காப்பறேசன் ஸ்தாபனத்தாரின்
சுவேந்திரா சோப், சந்தன சோப்,
ஹெக்ஸா குளோரபின் சேர்ந்த நைட் அன் டே
சோப், லுக்ஸ் ஜோய், வைட் ஒயில் பை ரேஞ்
**B. C. C. கோழித் தீன்**
முதலியனவும்
மற்றும்
**பலசரக்குச் சாமான்களும்**
மலிவாகவும் நம்பிக்கையுடனும்
பெற்றுக்கொள்ளலாம்.
**சி. சின்னத்துரை அன் பிரதர்ஸ்**
39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்
டெலிபோன்: 2 8 4 கிரும்: "கல்கி"
கிளை
79, மெஸஞ்சர் வீதி, கொழும்பு-12.
டெலிபோன்: 7 8 9 4 6

ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது
**புதுவருட வாழ்த்துக்கள்**

N. துரையப்பாபத்தர்
அன் சன்ஸ்
இல 131 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7080

புனிதமான புதிய ஆண்டை உங்களுடன்
நாமும் சேர்த்து வரவேற்று
**எல்லோரும் இன்புற்று வாழ இறைவனை வணங்குவோமாக!**
**விநாயகம் இன்டஸ்ரீயல்வேக்ஸ்**
(விநாயகம் நெல்லி ரச தயாரிப்பாளர்கள்)
39, மணிக்கூட்டு வீதி —] யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்கும் அன்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**
**V. K. இராசரத்தினம்**
றேடியோ விற்பனையாளர்களும் திருத்துபவர்களும்
95, ஸ்ரான்லி றேட், — யாழ்ப்பாணம்.

நாடும் செழித்து, நாமும் செழித்து
நற்பண்பும், கொடையும், தயையும்
மல்க
ஞானபண்டிதன் ஜவுளிக் கடை
ஸ்தாபனத்தார்
தங்கள் உள்ளம் கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்களை**

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
சமர்ப்பிக்கின்றனர்.
**ஞானபண்டிதன்**
ஜவுளிக் கடை
228, K. K. S.றேட், யாழ்ப்பாணம்.
போன்: 7107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

தேசிய லொத்தர் சபையின்

( Rs. 2/- )

ஜாதிக சம்பத் லவீப் டிக்கட்டுகளுக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பாராளுமன்ற தொகுதிக்கு ஏஜன்டுகளாக நியமிக்கப்பெற்றுள்ளோம் என்பதை இப்புனிதத் திருநாளில் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆ. ச. சங்கரப்பிள்ளை
அன் பிரதர்ஸ்

யாழ்ப்பாணம் – போன்: 308 —காரைநகர்.



Pelikan
4001

Brilliant in all shades
Flows easily
Keeps the pen clean
Preserves the nib
Instant writing




General Industries Limited
No. 15 1/1, Baillie Street,
COLOMBO


## தேர்த்திருவிழா

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்து மகிழ்ச்சியை ஊட்டுகிறது.

"அரோகரா... மருதடி ஐயனுக்கு அரோகரா..."

கோவிலுக்கு, அண்மித்துவிட்ட அவர்களின் காதுகளில் பக்தகோடிகளின் கூக்குரலும் காற்றில் மிதந்து வந்து விழுகிறது. பக்தர்களோடு சேர்ந்து தங்கள் கடமையை முடித்துக் கொண்டு இரும்புகையில் வேலுப்பிள்ளையர், தமது முன்னேற்பாடான காரியத்தைச் செய்துமுடிக்க அரியத்தை ஒரு மணிக்கடைக்குள் கூட்டிச் செல்கிறார்.

"ஐஸ் சர்பத்... சோடா ரோசடா ஐஸ் சர்பத்..."

"மிட்டாய்.. ஜில்... ஜில்... தும்புமிட்டாய்.. வாங்கோ... வாங்கோ வந்து வாங்குங்கோ..."

அரியத்தை மணிக்கடைக்குள் கூட்டிச்சென்ற வேலுப்பிள்ளையர், மீதியாக வைத்திருந்த பத்து ரூபாவை எடுத்துக் கொடுத்து, விளையாட்டு மணிக்கூடொன்றை வாங்கி அவள் கையில் கட்டி விடுகிறார். பின்பு, பித்தளை மோதிரம் ஒன்றையும் வாங்கி அவன் விரலில் அணிவித்துவிட்டுச் சிரிக்கிறார்.. ஒன்றுமே அறியாத அரியமும் பதிலுக்குச் சிரிக்கிறாள். இதுகளைப் பார்த்துப் பார்வதியும் சிரிக்கிறாள்...

"ஆ.. மருதனுமடம் இறங்குங்கோ..."

பஸ் கண்டக்டரின் குரல் வேலுப்பிள்ளையரின் கற்பனையில் குறுக்கிட்டுக் குளப்புகிறது. சந்தியில் நின்ற பஸ்ஸிலிருந்து இறங்கி வீடு நோக்கி நடந்துகொண்டிருக்கிறார் வேலுப்பிள்ளையர். பொழுதும் அடிவானத்துக்குச்சென்று மங்கிக்கொண்டு வருகிறது. [யாவும் கற்பனை]

## அதில்லே...

பையன்- சார், எங்க பாட்டி...

ஆசிரியர்- டேய்! நீ எத்தனை தடவையடா பாட்டி செத்துப்போயிட்டான்னு லீவு வாங்கிக்கிறது?

பையன்: அதில்லே சார்... எனக்குக் காய்ச்சல் என்று சொல்லிப் போட்டு வரச்சொன்னு எங்க பாட்டி.

— இமையாணன்

# கீலக வருடம்

### பிறப்பு

கீலக வருடம் சித்திரை மாதம் 1-ந் திகதி சனிகிழமை பகல் உதயாதி நாழிகை 16—14 (மணி 12—34) இல் பிறக்கும். லக்கினம் கர்க்கடகம், நட்சத்திரம் சித்திரை. அன்று காலை 8 மணி 34 நிமிடம் தொடக்கம் பிற்பகல் 4 மணி 34 நிமிடம் வரை விஷு புண்ணியகாலமாம்.

### வருட பொதுப்பலன்

இவ்வருடத்தில் அரசியல் தலைவர்களிடையே பரஸ்பர விரோதங்கள் தோன்றுதலும் வெளிநாட்டு விவகாரங்களில் பெரு முயற்சியும், வர்த்தக உடன்படிக்கைகளும், விவசாயம், கைத்தொழில் முதலியவற்றிலும் அதிக ஊக்கமும், பணச்செலவும், நாட்டில் விளைவு அதிகரித்தலும், தொழிலாளர் உரிமைக்காக வாதாடுவதால் விபத்துக்குள்ளாதலும், பொது ஸ்தாபனங்களில் பெண்கள் கௌரவிக்கப்படுதலும், வியாபாரத்துறையில் பலவித கஷ்டநஷ்டங்கள் உண்டாதலும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் உணவுக் கஷ்டமும் கொலை, களவு திருடர் பயம் முதலியன அதிகரித்தலும், பிரயாண வசதிகள் அதிகரிப்பதுடன் காத்திராப்பிரகாரமான இடையூறுகள் ஏற்படுதலும், வெடி விபத்துக்களால் மரண அதிகரிப்பும், அதிசயிக்கும்படியான விதம் விதமான நோய்கள் பரவுதலும், திடீர் மரணங்கள் சம்பவித்தலும் உண்டாம்.

(நன்றி:- மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கம்)

# வாழி! புத்தாண்டே!

வாழிய கீலகி! வாழி! புத்தாண்டே!
வையம் புரக்க வந்தனை இன்று,
கைவளை குலுங்கக் குலுங்கிடச் சதங்கை
செய்யவ ளாகிச் சீர்பெற வையம்
வளனுறு வாழ்வை மக்கட் கருளி
இல்லந் தோறும் இன்பம் பெருகப்
பசியும் பிணியும் பாரினில் ஒழிய
அல்லவை செய்யா நல்லன கருதித்
தானமும் தன்மமும் தாமது செய்து
நானிலங் காத்து நன்செய் புன்செய்
பண்ணிடு பயிர்கள் பலனிறைத்திடவே
வானம் பொய்யா வளனளித் தின்றும்;—
வஞ்சமும் பொய்யும் வாழ்வி லகற்றி
நெஞ்சி லன்பும் நினைவி லாக்கமும்
வஞ்சின மகன்று வாழ மக்கள்
ஒன்றே குலமாய் ஒற்றுமையாக
நாடு சிறக்க நல்லன செய்ய
ஆண்டு தோறுண்டு அஞ்சலி செய்திட
வேண்டி வந்தனை! வியந்துனை மக்கள்;—
புதுப் புனலாடும் பொலிவுடன் நாமும்
கோடியுடுத்துக் குதூகலங் கொள்ள
புத்தொளி கூட்டிப் பொலிவுற விங்கு
நாளும் நலம்பெற
ஈடிலா இன்பம் ஈந்திட வருக!

கீலகி — கீலக ஆண்டு

— இளம்பரணன்


அருகில் நின்று பார்த்தாலும்... களங்கமற்ற அழகு

கேடில் கலந்த

ரெக்ஸோனு

சோப்புக்கு நன்றி



★ கேடில், அபூர்வமான அழகுத் தைலங்களின் விசேஷ கலவை. ரெக்ஸோனுவில் மட்டுமே கேடில் அடங்கியுள்ளது. கேடில் கலந்த ரெக்ஸோனு உங்கள சருமத்தைப் போஷித்து, அதை மென்மையாகவும் வனப்பாகவும்..., களங்கமில்லா அழகோடும் திகழச் செய்கிறது.




ஒரு லீவர் உற்பத்தி

C/RP-18 X94 (R)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - ஜோர்தான் துருப்புகள் மீண்டும் மோதல்

அம்மான், ஏப்ரல் 12

இஸ்ரேல் துருப்புகளும், ஜோர்தான் துருப்புகளும் நேற்று ஜோர்தான் ஆற்றுக்குக் குறுக்கே துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டன.

இருசாராரும், மற்றவரே முதலில் சண்டையை ஆரம்பித்ததாகப் பரஸ்பரம் குற்றஞ்சாட்டினர்.

இச்சண்டையில், 3 இஸ்ரேலியரைக் கொன்றதாக ஜோர்தான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேலிய டாங்கிகள், 3 ஜோர்தான் கிராமங்களைத் தாக்கியதாக ஜோர்தான் புகார் கூறியுள்ளது.


மற்றவர்களை முந்திச் செல்ல


BSA

பி. எஸ். ஏ.

கோல்டின் டி லக்ஸ்

ரேட்ஸ்டர் சைக்கிள்களையே

தெரிவு செய்யுங்கள்



- ✱ உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- ✱ நீடித்த உறுதி வாய்ந்தது
- ✱ வசதிக்கு சாதகமான அமைப்பு
- ✱ 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு

ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


வியட்னும்

# சமாதானப் பேச்சுக்களுக்கான இடம் பற்றிய சர்ச்சை

## தொடர்ந்து நீடிக்கிறது

வாஷிங்டன், ஏப்ரல் 12

வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்ட, அமெரிக்க-வட வியட்னும் பிரதிநிதிகளுக்கிடையேயான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் இடம் பற்றி அமெரிக்காவும், வட வியட்னுமும் இன்னும் ஓர் உடன்படிக்கைக்குவரவில்லை

கடைசியாக வெளியிட்ட ஒரு செய்தியில், போலந்து தலைநகரான வார்சோவில் இப்பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாமென வட வியட்னும் ஆலோசனை தெரிவித்திருந்தது.

### அமெரிக்கா மறுப்பு

இது பற்றி, அமெரிக்க வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், வார்சோவை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூறினர்.

பேச்சுவார்த்தைகள் ஒரு நடுநிலைமை நாட்டின் தலைநகரிலேயே நடத்தப்படவேண்டுமென்ற அமெரிக்காவின் கொள்கை நிலைக்கு, வார்சோவில் பேச்சுக்களை நடத்துவது முரணுகுமென்றும் அவர் குறிப்பிட்டார். பேச்சுவார்த்தைகள் நடுநிலைமைச்சூழ்நிலையில் நடைபெறுவதற்கும் இது உசிதமாகாதென்று அவர் மேலும் கூறினர்.

ஆனல், வார்சோவை ஜனதிபதி ஜோன்சன் நிராகரித்துவிட்டார் என்று அப்பேச்சாளர் உறுதியாகத் தெரிவிக்கமறுத்துவிட்டார். பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுப்பது பற்றி அமெரிக்காவுக்கும் ஹனேய்க்குமிடையே பரஸ்பர கடிதப் பரிமாறல் நடைபெற்றுவருவதாகவும் தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர்தெரிவித்தார்

### வியன்ன

இதற்கிடையில், ஆஸ்திரியா நாட்டுத் தலைவர், தமது தலைநகரான வியன்னவில் அமெரிக்க-வட வியட்னும் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அனுமதியளிக்க முன்வந்துள்ளார். புதுடில்லி, ரங்கூன், வியன்ஷியென் ஆகிய தலைநகர்களும் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## வேலைநிறுத்தம் பற்றியோசனை

அளவெட்டி, வெள்ளி

தமது பதினைந்து அம்சக் கோரிக்கைகள் நிறைவேறுமா அல்லது வேலைநிறுத்தத்தில் இறங்குவதா என்ற கேள்வி இப்போது புகையிரத பாதுகாவலர்சங்க ஊழியர்கள் மத்தியில் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

சங்கத்தின் உபதலைவர் திரு. ஏ. சி. கரீமை திரும்பவும் வேலையில் அமர்த்தல் ஒருதினத்தில் கூடிய கடமை நேரம் 10 மணிக்கு மேலாகக் கூடாது, இரண்டு கடமைகளுக்கும் இடைப்பட்டநேரம்முழுதாகக் கணிக்கப்படவேண்டும் ஆகியன இவர்களின் முக்கிய கோரிக்கைகள்.

மேற்கண்ட 15 அம்சக் கோரிக்கைகளையும் போக்குவரத்து அமைச்சர் ஏற்று எழுத்து மூலம் உத்தரவுகள் அறிவித்தபின்பே இம்மாதம் 27-ந்திகதி நடத்த உத்தேசித்துள்ள வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதுபற்றி பரிசிலனை செய்ய முடியும் என பாதுகாவலர் சங்கப் பிரதிநிதி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

சென்ற 9-ந்திகதி போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல் பி. குருல்ல அகில இலங்கைப் புகையிரத பாதுகாவலர் சங்கப்பிரதிநிதிகளை அழைத்துப்பேச்சுவார்த்தை நடத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.


மங்கையர் விரும்பும் மனதிற்கேற்ற

நவீன நூதன டிசைன்களில்

உத்தரவாதமுள்ள பிரகாசமான

தங்க நகைகளுக்கு

பிரசித்தமான இடம்

பிரகாஷ்

- o அரிய சித்திர வேலைப்பாடுகள்
- o கண்ணியமான சேவை
- o கண்ணைப் பறிக்கும் டிசைன்கள்
- o நகதகவென ஜொலிக்கும் நகைகள்

உங்களுக்குப் பிடித்தமானதைத் தெரிவுசெய்ய

இன்றே விஜயம் செய்யுங்கள்.

பிரகாஷ் நகை மாளிகை,

106, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி: 5808 (3 லைன்கள்) தந்தி: 'குப்பர்'


## ஐயாறன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென்பார் அமரகவி பாரதியார். இன்று பிறக்கும் புத்தாண்டிலே, குடி முதலிய நமது கூடாத பழக்கங்களான அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற உறுதிகொண்டால், பிறக்கும்புத்தாண்டு நமக்கு மிகமிக மேலாக இருக்குமென்பது உறுதி.

ஃ ஃ ஃ

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்<br>போகமும் திருவும் புணர்ப்பானைப்<br>பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்<br>பிழையெல்லாந் தவிரப் பணிப்பானை<br>இன்ன தன்மையன் என்றறிவொண்ணு<br>எம்மானை எளிவந்த பிரானை<br>அன்னம் வைகும் வயற் பழனத்தணி<br>ஆரூரானை மறக்கலுமாமே

—ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்

[எனக்கு பொன்னையும்மெய்யுணர்வையும், உலக இன்பத்தையும், வீட்டின்பத்தையும், சேர்க்கின்றவனும், செய்கின்ற பிழைகளைப் பொறுப்பவனும், பிழையேவராது அருள் செய்பவனும் எனக்கு எளிவந்தபிரானுமாகிய திருவாரூர் இறைவனை நான் மறத்தலும் இயலுமோ.]

## சைவம் தழை...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கிராமங்களிலுள்ள சங்கங்களை கோயில் தர்மகர்த்தாக்களை கலந்தாலோசிக்கவேண்டும் புரட்சிவாதம்வன்முறை சட்டம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றினுல் தீண்டாமையை ஒழித்துவிடமுடியாது.

திரு. ரி. முத்துச்சாமிப்பிள்ளை கூறுவதாவது:

ஆகம விதிப்படிதான் வழிபாடு நடைபெற்றுவருவதாகச் சிலர் கூறுகிறுர்கள். ஆனல் ஆகமவிதிப்படி கட்டப்பட்ட ஆலயங்கள் இங்கு இல்லை. இந்தியாவில் ஆகமவிதிப்படி கட்டப்பட்ட ஆலயங்கள் திறந்துவிடப்பட்டபோது நாம் ஏன் இதில் தாமதிக்கவேண்டும்.

சைவப்புலவர் சி. வல்விபுரம் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் செல்லாத கோவில் ஒன்றுகூட இல்லை. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில பல ஆண்டுகளாக வடமராட்சியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் உள்ளே சென்று வழிபட்டு வருகிறுர்கள். ஆனல்மாவிட்டபுரத்தில் வாழும் சிறுபான்மைத்தமிழருக்குத்தான் அங்கு தடை. வல்விபுரக்கோவிலில் தென்மராட்சியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் சென்று வழிபடுகிறுர்கள். ஆனல் வடமராட்சியில் வாழும்சிறுபான்மைத் தமிழருக்குத்தடை. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

அட்வக்கேட் எஸ். பொன்னையா சமுதாயத்தில் தீண்டாமை அறவேஒழிக்கப்படவேண்டுமென்றும் இந்துமாமன்றம் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்றும் கூறினர்.

புங்குடுதீவு சைவசமாமன்றத்தைச் சேர்ந்த கே. செல்லத்துரை பேசும்போது கூறியதாவது:

பஸ்களில் பக்கத்திலிருப்பவர்கள் ஆஸ்பத்திரியில் அருகில் இருப்பவர்கள், கோவிலுக்கு கூட வருவதில் என்ன தவறு இருக்கிறது? புங்குடுதீவில் கண்ணகை அம்மன் கோவில் திறந்துவிடப்பட்டு நல்ல மாதிரி நடக்கிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பேசும்போது, தீண்டாமைப் பரச்னையைத் தீர்ப்பதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் தேவையென்றும், கிராமந்தோறும் பிரசாரம் செய்யவேண்டுமென்றும் கூறினர்.

திருவாளர்கள் மூ. சி. கந்தையா, சரவணமுத்து, ஆ. ம. செல்லத்துரை, எஸ். கந்தையா ஆகியோரும் பேசினர்கள்.

ஆலய தர்மகர்த்தாக்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. கமிட்டி அங்கத்தவர்கள் வருமாறு;

தலைவர்: திரு. ரி. முத்துசாமிப்பிள்ளை, உபதலைவர்: முதலியார் சின்னத்தம்பி, இணைக்காரியதரிசிகள்: திரு. எஸ். அம்பிகைபாகன், திரு. எஸ் பொன்னையா, கமிட்டி உறுப்பினர்கள்: திருவாளர்கள் ரி. முருகேசம்பிள்ளை, சி. க. வேலாயுதபிள்ளை, இ. கந்தையா, க. செல்லத்துரை, எஸ். ஸ்ரீநிவாசன், வி. கந்தப்பிள்ளை, த. நல்லதம்பி, க ஏரம்பமூர்த்தி எஸ். அருணுசலம்.

இக்கமிட்டி வண்ணை வைதீஸ்வரா வித்தியாலயத்தில் இம்மாதம் 14-ந் திகதி காலை சந்தித்து நிலைமை பற்றி ஆராயும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருட விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம், சனி

இன்று புதுவருடத் தினத்தைமுன்னிட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள சகல தியேட்டர்களிலும் 2-வது படக்காட்சி முடிந்தபின்பும் பிரயாணிகள் வீடு திரும்புவதற்கு வகைசெய்யுமுகமாக இரவு 1-30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து சகல பாதைகளிலும் பஸ் சேவையிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.


எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இன்றே வாங்குங்கள்

சுத்தமான

# காவடி மார்க் கற்பூரம்




இலங்கையில் தயாரிக்கப்படும், காவடி மார்க் கற்பூரம் இறக்குமதி செய்யப்படும் கற்பூரங்களை விடசிறந்தது. எரியும்போது தூய்மையிக் நறுமணத்தை நல்குவதோடு, அதிக நேரம் நின்று எரியும் தன்மை உள்ளது. சுத்தமான விளைவு கற்பூரத்திலுல் தயாரிக்கப்படும் காவடி மார்க் கற்பூரங்கள் தினசரி பூஜைகளுக்கும் ஆலய வழிபாட்டிற்கும் மிகச் சிறந்ததாகும்.

காவடி மார்க் கற்பூரம் இப்பொழுது 3 அவுன்ஸ் ¼ இரு. ½ இரு. பக்கெட்டுகளில் கிடைக்கும். ஒவ்வொரு பக்கெட்டுகளிலும் 128 வில்லைகள், 960 வில்லைகள் கொண்ட டின்களிலும் கிடைக்கும்.

குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:-

M. மாணிக்கவாசகம் அன் கோ.

கற்பூரத் தொழிற்சாலை

கொழும்பு 15.

கிளை:

106-2/1, ரெக்லமேசன் ரோட், கொழும்பு-11.


## பார்லிமென்டில் என்.எம். கேள்வி

கொழும்பு, வெள்ளி

வலிகாமம் வடக்கு கூட்டுறவுப் பாற்பண்ணை சங்கம் பற்றி திரு. பீ. டர் கெனமன் சார்பில் டாக்டர் என். எம் பெரேரா பார்லிமென்டில் கேள்விகேட்டுள்ளார்.

இப் பாற்பண்ணை பற்றி யாழ்ப்பாணம் மேற்குப் பிரிவுக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிக் கமிஷனர் அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருந்தாரா என்றும் பாற்பண்ணைத் தலைவரின் தவறான நிர்வாகம் பற்றியும் புதிய தெரிவுகள் நடைபெறும் வரை தற்போதைய நிர்வாகக் கமிட்டியை நீக்கிவிட்டு அதனிடத்தில் ஒரு நிர்வாகச் சபையினை நிறுவ வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் அவர் சிபார்சு செய்திருந்தாரா என்றும் உணவு விவசாய மந்திரியிடம் டாக்டர் என். எம் பெரேரா கேட்டார்.

உணவு விவசாய மந்திரி சார்பாக பதிலளித்தகல்வி கலாச்சார அமைச்சின் பார்லிமென்டரிக் காரியதரிசி திரு. தாமினி ஜயசூரியா அத்தகைய அறிக்கையொன்று அனுப்பப்பட்டதாகவும் அதுபற்றி ஒரு முடிவுக்கு வந்தபின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் கூறினார்.

## தற்புருஷ தேசிகர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபை ஆதரவில் இம்மாதம் 17-ம் 18-ம் 19-ம் திங்களில் நடைபெறும் சைவமகாநாட்டில் கலந்துரையாற்ற தர்மபுர ஆதீன வித்துவான் சித்தாந்த புலவர் மாமணி பாலவிவயிஞாரம் வே. இராமநாதன் செட்டியார் [தற்புருஷ தேசிகர்] யாழ்ப்பாணம் வருகிறார். இம்மகாநாட்டில் திருவாளர்கள் பொன் முத்துக்குமாரன், க. கி. நடராஜன் ஆகியோர் விசேடசொற்பொழிவாற்றுவர். [தி]

## இன்று

யாழ்ப்பாணம், சனி

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று இரவு 7 மணியளவில் சேதுகாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் திரு. ஆ. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

## "ஒதுங்குகின்ற மனப்பான்மை அகல வேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

"கலை பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வரும் போதுதான் அதன் சிறப்புப் பரிணமிக்க முடியும். இன்று வாழ்கின்ற நம்மவரிற் பலர் நமது மரபுக்குரிய உயர்ந்த தொழிலை ஒதுக்கி வேறுதுறைகளையே நாடிச்செல்லுகின்றோம். நம் முன்னவர் கட்டிக்காத்து வந்த உயரிய பாதையில் செல்லாமல் ஒதுங்குகின்ற மனப்பான்மைநம்மைவிட்டு அகலுமானால் நிச்சயமாக உயரமுடியும். திரு. தம்பித்துரை ஆங்கிலப் படிப்புபடித்து உத்தியோகத்தில் உயர்வுற்றபோதிலும் அவர் தனது தந்தையாரின் கலையாக்கத்தைக் கைக்கொண்ட தன்காரணமான கலைதான் அவரை நிலைநிறுத்துகின்றது.

இவ்வாறு கடந்த புதன் கிழமைமாலை யாழ்ப்பாணம் வை.எம்.சி. மண்டபத்தில் சித்திர இன்ஸ் பெக்டராக பதவி பெற்ற திரு. தம்பித்துரையின் பாராட்டுக் கூட்டத்தில் பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. ஸி. சிவபாதசுந்தரம் தெரிவித்தார். இப் பாராட்டுக் கூட்டத்தை யாழ் இலக்கிய வட்டம் ஒழுங்குசெய்திருந்தது. கூட்டத்துக்கு யாழ். இலக்கிய வட்டத்தலைவர் திரு. வி. கந்தவனம் தலைமைதாங்கினார்.

மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. து. ஜயரத்தினம் பேசுகையில் 'தந்தைமகற் காற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல் என்ற குறளுக்குஇலக்கணமாகவாழ்கின்றபேறும் பெற்றவர் தம்பித்துரை என்று குறிப்பிட்டார்

இரசிகமணி கனகசெந்திநாதன் சித்திர ஆசிரியராக விளங்கிய ஆ. தம்பித்துரை அவர்கள் எவ்வாறு நல்ல நூலாசிரியராக பரிணமித்தார் என்பதை விளக்கினார்.

திரு. தம்பித்துரை பாராட்டுக்கு நன்றிதெரிவித்தார். [நி]

# சமத்துவ உரிமை பெற்றுத்தருவோம்

## அரசாங்கஅதிபர் வேர்ணன்கூறுகிறார்

குரும்பசிட்டி, வெள்ளி

'தேசிய அரசாங்கம் சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்தவரின் குறைபாடுகள் கஷ்டங்களைப் போக்குவதற்கு முயற்சி செய்துவருகின்றது. அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைப்பையும்ஆதரவையைஇச்சமூகத்தவருக்குஎன்றும்வழங்குவர். சமூகத்தில் ஆலயப் பிரவேசம், தேநீர் சலவை, சிகை அலங்கரிப்பு போன்ற நிலையங்களில் சமத்துவ உரிமைகளை நிலைநாட்டி சிறுபான்மையினரின் உரிமைகளை குறுகிய காலத்திலுள் நிவர்த்தி செய்வோமென்று நம்பிக்கையாகத் தெரிவிக்கின்றேன்.'

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் 8-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோண்டாவில் சிவகாமி அம்மன் கோவில் முன்றலில் இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. வீ. முருகேசம்பிள்ளை திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம், என். பாலசுந்தரம், எஸ். செல்வரத்தினம் ஆகியோரும் பேசினர். இறுதியில் "திருவிளையாடல் புராண நாடகம் நடைபெற்றது.

## சூதாட்டத்தை நிறுத்துக

### பொலிஸ் அதிபர் உத்தரவு

கண்டி, சனி

கண்டியில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வரும் களியாட்டவிழாவொன்றில் பகிரங்கமாக சூதாட்டம் நடைபெற்று வருவதாக எனக்கு புகார் செய்யப்பட்டுள்ளது இது சம்பந்தமாக விசாரணை நடத்தி பகிரங்கமாகநடைபெறும்சூதாட்டத்தை நிறுத்தத்தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் என்று பொலிஸ் அதிபர் திரு அலரிக் அபயகுணவர்த்தனா தந்தி மூலம் கண்டி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## வெற்றி தோல்வி இல்லை

அளவெட்டி, வெள்ளி

தெல்லிப்பழை குட்டின்ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் உரும்பிராய் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் மோதல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கீரிமலை உயனை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு எஸ். முருகையா. எஸ். சிவஞானம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

மற்றும் விவியன் குணவர்த்தன, திரு. நவரட்ன, திரு. ரத்நாயக்கா, திரு. வி. எஸ், ராஜு, ஜனுப் சுலைமான், திரு. மாரசிங்க ஆகியோரும் பேசினார்கள்.


புதுவருட

வாழ்த்துக்களும்

ஆசிகளும்

# யானை பீடி கொம்பனி

154, சேர் ரத்தின ஜோதி சரவணமுத்து மாவத்தை,


கொழும்பு—12.

டெலிபோன்: 7651 & 7766


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினை ஆக்கும்

## முயன்று முயன்று பாருங்கள்





தேசீய லொத்தர்ச் சீட்டுகளை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள் முயற்சிக்கு அதுதான் முதற்படி! அடுத்து வரும் சீட்டிழுப்பில்

50 சதம் மட்டும் செலவளித்து-- புத்தம் புதிய காரும் பெருந் தொகையான ரொக்கப்பணமும் பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## அடுத்து வரும் சீட்டிழுப்பில் *

சீட்டிழுப்பு இல. 190. 1968 ஏப்ரில் 18ந் தேதி களுத்துறையில் நடைபெறும்.

1 வது பரிசு ரூ. 100,000/- அல்லது மேர்சிடெஸ் பென்ஸ் காரும் ரூ 50.000/- ரொக்கமும் *



2 வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம் புதிய சிங்கர் கஸெல்லி காரும் ரொக்கம் ரூ. 22,700/- *



3 வது பரிசு ரூ. 10,000.

100 ஆறுதல் பரிசுகள்

கடந்த இரண்டு கார் சுவீப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் தலா ரூ. 1415/- பரிசாகப் பெற்றனர்


இந்த கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

வாரத்துக்குவாரம் நூற்றுக்கணக்கான மக்கள் திடீரெனச் செல்வந்தர் ஆகிவிடுகிறார்கள் 50 சதமே வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தை அளித்துவிடுகிறது!

NLB 4/67 AJNG.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் எதிர்பாருங்கள்!



முகூர்த்த நாள்

ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எஸ். டி. ஆர். பிலிம்ஸாரின்

அன்பு கலந்த

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பரிசு அளிக்கும் **111**வது தினம்!

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த

ராஜா [யாழ்ப்பாணம்]

இன்றும், நாளையும் 4 காட்சிகள்

# காவல்காரன்

இன்று [13-4-68] உங்களின் நுழைவுச் சீட்டுகளுக்கு 2-வது காட்சியின் இடைவேளையில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு இந்தியா போய்வர விமான சீட்டுகளும் மற்றும் 17 அதிர்ஷ்டசாலிகளுக்கு விலையுயர்ந்த பரிசுகளும் வழங்கப்படும். பரிசுபெறும் டிக்கட்டுகளின் இலக்கங்கள் 15-4-68 'ஈழநாடு' இதழில் பிரசுரிக்கப்படும் உங்களின் பரிசுகளை பெற்று மகிழ மறவாதீர்கள்.

# சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட்

வருகிற மாதங்களில் பெருமையுடன் அளிக்கும் தமிழ் சினிமாப் படங்களில் சில பின்வருமாறு:-

**அரச கட்டளையில்**
எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி, ஜெயலலிதா, அசோகன்.

**திருமால் பெருமை**
[ஈஸ்ட்மன் கலரில்]
சிவாஜி கணேசன், பத்மினி, கே. ஆர் விஜயா, நாகேஷ்

**இரகசிய பொலீஸ்**
[ஈஸ்ட்மன் கலரில்]
எம். ஜி ராமச்சந்திரன், ஜெயலலிதா.

**சீதாவில்**
ஜெமினி கணேசன் சாவித்திரி, முத்துராமன், கே. ஆர். விஜயா

தேவரின் **மகராசியில்**
ரவிச்சந்திரன், ஜெயலலிதா,

**குடியிருந்த கோயிலில்**
[ஈஸ்ட்மன் கலர்]
எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா.

**'வாலிப விருந்து'வில்**
ரவிச்சந்திரன். பாரதி, சந்திரபாபு

**அத்திப்பூவில்**
ஜெமினி கணேசன் பாரதி

★ **இரு மலர்களில்** ★
சிவாஜி கணேசன், பத்மினி, கே. ஆர். விஜயா, நாகேஷ்.

ரசிகப் பெருமக்களுக்கும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

—சினிமா ஸ்தாபனத்தார்

**கெப்பிட்டல்-பிளாஸா**
(பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 9-30 மணி.)

**மைலன்-வெம்பிளி**
2, 6, 9-30 (கண்டி) 2, 6, 9-30

**விஜயா** - [மட்டுநகர்] 2, 6, இரவு 9-30

**மொடேர்ன்** - [பண்டாரவளை] 2, 6, 9-30

**ஸ்ரீ கிருஷ்ணா** - [தருமலை] 2, 6, 9-30

**லக்ஷ்மி** [இரத்தினபுரி] 6-30, 9-30


பாடல்கள்: வாலி

இசை: மெல்லிசை மன்னர் விஸ்வநாதன்

தயாரிப்பு: வாசு

பாஸ்கள் சலுகைகள் ரத்து

புரட்சி நடிகர்
★ எம். ஜி. ராமச்சந்திரன்
அபிநய சரஸ்வதி
★ சரோஜாதேவி
நடிகவேள்
ராதா
சிரிப்பு மன்னன் தங்கவேலு
நம்பியார், அசோகன்
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
திரையில் துலங்க



சென்னையில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றிக்கொடி நாட்டிய சித்திரம்.

★

மக்கள் திலகம் எம். ஜி. ஆரும் நடிகவேள் எம். ஆர். ராதாவும் கடைசி முறையாகச் சேர்ந்து நடித்த வண்ண சித்திரம்

ஸ்ரீ முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்

# பெற்றால்தான் பிள்ளையா?

டைரக்ஷன்: கிருஷ்ணன் - பஞ்சு

வெகுவிரைவில் வெலிங்டன் (யாழ்ப்பாணம்) எதிர்பாருங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.